# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 89 — 1973 දෙසැම්බර් 07 වැනි සිකුරාදා — 1973.12.07

89 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் — வெற்றிடம் ... | 1299 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 1311 |


*கவனிக்க.—பொலிஸ் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

**1 : 1** விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

**1 : 2** ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

**1 : 3** விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகாண்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "பதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

**2 : 1** அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

**2 : 2** மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

---

### 3. சேவை நிபந்தனைகள் : பொது

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

### 4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவாறுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எயதும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

### 5. நியமன நியதிகள்

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் மனைவி பிள்ளை விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

### 6. யுத்த சேவைச் சலுகை

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், இலங்கைத் தரைப் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1** எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 : 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும் ; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

*இல. எஸ். எச். 898/72.*

**பொலிஸ் திணைக்களம்**

*பொலிஸ் பயிற்சி பாடசாலையில் "ஹேவிசி பான்ட்" வாத்தியக் கோஷ்டியின் பாண்ட் வாத்திய ஆசிரியராக தகைமை காண் நிலை பொலிஸ் உப பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்த்தல்*

*பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் "ஹேவிசி பான்ட்" வாத்தியக் கோஷ்டியின் பான்ட் வாத்திய ஆசிரியராக தகைமை காண் நிலை பொலிஸ் உப பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*2. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களை பொலிசு அத்தியட்சகர், ஆட்சேர்ப்பு அலுவலகம், கொமசாறியற் வீதி, புதிய இறங்குதுறை, கொழும்பு 1 என்னும் முகவரிக்கு 73.12.31 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இத்திணைக்களத்தால் கொடுக்கப்படமாட்டா. விண்ணப்பப் படிவங்கள் அனுப்பும்படியான கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "விண்ணப்பம்—தகைமை காண் நிலை பொலிஸ் உப பரிசோதகர்—ஹேவிசி பான்ட் வாத்திய கோஸ்டி" என குறிப்பிட வேண்டும்.*

*3. (அ) அரச சேவையில் உள்ள தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர்கட்கூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

*(ஆ) விண்ணப்பதாரிகள் வேண்டிய விபரங்களைத் தங்கள் சொந்தக் கையெழுத்தால் எழுதி நிரப்பி கோரப்படும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு தம் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். எச் சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பத்தை எந்தவொரு உத்தியோகத்தரின் பெயருக்கோ அல்லது பொலிஸ் அதிபருக்கோ அனுப்பக் கூடாது.*

*4. சம்பள விகிதம்.—ரூபா 4,260—ரூபா 7,320*
*17 × 180*

*5. வேண்டிய தகைமைகள்.—(அ) வயது எல்லை—19 வயதுக்கு கீழ்ப்படாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.*

*குறிப்பு.—20.3.58 ஆம் திகதிய இல. 434 உள்ள திறைசேரி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வயதுச் சலுகை ஆயுதப் படைகளின் முன்னாட் சேவையாளர்களுக்கு அளிக்கப்படும்.*

*(ஆ) கல்வித் தகைமைகள்.—பரீட்சார்த்திகள் சிரேஷ்ட பாட, சாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலோ அல்லது அதனிலும் உயர்தரப் பரீட்சைகளிலோ, அல்லது இருமுறைக்கு மேற்படாத பரீட்சைகளில் சிங்களம், தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களுக்குக் குறையாமல் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சையில் சித்தியெய்தியவர்களாக இருத்தல் வேண்டும்.*

*(இ) சங்கீதத் தகைமைகள்.—(i) பாட்டு, இசைக்கருவி ஆகிய இரு பிரிவுகளிலும், சங்கீதம், நுண்கலைகட்கான அரசாங்கக் கல்லூரியில் கீழ்த்தேச சங்கீதத்தில் குறைந்தது நான்காவது ஆண்டுத் தராதரப் பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.*

*(ii) "கண்டருவ சங்கீதப்" பரீட்சையின் குறைந்தது முதலாவது படியிலாவது தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.*

*(iii) கண்டிய மேள இசையின் படிப்பறிவும் பயிற்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.*

*(iv) கிராமிய சங்கீதம், கிராமிய பாட்டுக்கள் ஆகியவற்றில் அறிவு உள்ளவராக இருக்க வேண்டும். கீழ்த்தேச இசைக் கருவிகள் கொண்டு சங்கீதம் அமைக்கவும் ஒழுங்கு செய்யவும் விசேட ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.*

*(v) ஒரு ஹேவிசி பான்ட் வாத்தியக் கோஷ்டிக்கு குறைந்தது மூன்று வருட காலம் தலைமை தாங்கிய அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.*

*(ஈ) சரீரத் தகைமைகள்—*

*உயரம்.—5' 6"*

*நெஞ்சு.—34" (சாதாரண மூச்சு விட்ட நிலை)*

*கண்பார்வை.—நிறப்பார்வை சாதாரணம். கண்ணாடி உபயோகிக்க வேண்டிய பரீட்சார்த்தி எவரும் தகுதி அற்றவர் ஆவர்.*

*இருந்த போதிலும் ஹேவிசி பான்ட் வாத்திய கோஸ்டிக்கு வேண்டிய செவ்வையான சங்கீதத் தகைமை உடைய பரீட்சார்த்தியை இப்பதவிக்கு நியமித்தற் பொருட்டு கல்வி, சரீர தகைமைகளை பொலிஸ் அதிபர் தன் சுய தீர்மானம் கொண்டு சற்று தளர்த்த முடியும்.*

*(உ) ஏனைய தகைமைகள்.—(i) விண்ணப்பதாரர்கள் இலங்கையராயிருத்தல் வேண்டும்.*

*(ii) அவர்கள் விவாகம் ஆகாதவர்களாக இருத்தல் வேண்டும்.*

*6. ஆட்சேர்க்கும் முறை.—விளம்பரம் செய்த பின் இதற்கென அமைக்கப்பட்ட தெரிவுச் சபைகளால் ஆரம்ப, இறுதி நேர்முகப் பரீட்சைகள் மூலம்.*

*7. வேலைக்கமர்த்தும் தன்மை.—இப்பதவி நிரந்தரமானது. நியமனம் பெறுவோர் மூன்று வருட கால பரீட்சார்த்த நிலையில் வைக்கப்படுவர். அவர்கள் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குக் கட்டுப் பணம் செலுத்த வேண்டும்.*

8. சேவை நிபந்தனைகள்.—(i) தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 : 6, 10 : 14 ஆகிய உப பிரிவுகளை அனுஷ்டிக்க வேண்டியிருக்கும்.

(ii) இந்நியமனம் மூன்று வருட காலத்துக்கு பரீட்சார்த்த நிலையில் வைக்கப்படும்.

(iii) திணைக்கள ஆணைகள், பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவை, பொலிஸ் அதிபரோ அரசாங்கத்தாலோ காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் வேறெந்த ஆணைகளுக்கோ கீழ்ப்படிந்து நடக்க வேண்டியிருக்கும்.

(iv) பதவியில் உறுதிப்படுத்த முன்பு குறிப்பிடப்பட்ட திணைக்களப் பரீட்சைகளில் அவர்கள் சித்தியெய்த வேண்டியிருக்கும். இப்பரீட்சைகளில் சித்தியெய்தத் தவறுவோர், அல்லது பொலிஸ் கடமைகளுக்கோ ஹேவிசி பான்ட் வாத்தியக் கோஷ்டிக்கோ தகுதியற்றவர் எனக் காணப்படுவோர் சேவையிலிருந்து நீக்கப்பட நேரலாம்.

(v) தம் பதவிகளில் உறுதிப்படுத்தப்பட முன்பதாக அவர்கள் விவாகம் செய்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். இரண்டு வருட கால திருப்திகரமான சேவையை நிறைவேற்றியோரின் விவாகம் செய்துகொள்வதற்கான அனுமதி கோரும் விண்ணப்பங்கள் பொலிஸ் அதிபர் தற்றுணிபு கொண்டு தீர்மானித்தற் பொருட்டு கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படும்.

(vi) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் ஹேவிசி பான்ட் வாத்திய கோஷ்டியில் முழு நேரக் கடமையில் அமர்த்தப்படுவர். எனினும் அவசியம் ஏற்படும் போது அவர்கள் பொலிஸ் கடமைகளிலும் ஈடுபடுத்தப்படலாம்.

9. இவ்வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி (II அ) வின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளைக் கவனியுங்கள்.

10. விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் :—

(i) பிறப்புச் சான்றிதழ்.

(ii) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு.

(iii) கல்வித் தகைமைகளையும் சங்கீதத் தகைமைகளையும் சங்கிதத் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

11. விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்களும் இப்பிரசுரத்துக்கு அமையாத விண்ணப்கங்களும் நிராகரிக்கப்படும்.

டி. எஸ். ஈ. பி. ஆர். சேனநாயக்க,
பொலிஸ் அதிபர்.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1,
1973.11.22.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(ஹேவிசி பான்ட் வாத்தியக் கோஷ்டி) தகைமைகாண் நிலை பொலிஸ் உப பரிசோதகர் பதவி

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.
(விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் கொடுக்கப்பட்ட பெயரையே குறிப்பிட வேண்டும்)

2. தகப்பனின் முழுப் பெயர் :————.

3. தகப்பனின் தொழில் :————.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :————.
பிறந்த இடத்தைச் சார்ந்த கிட்டிய பொலிஸ் நிலையம் : ————.
மாகாணம் :————.

5. உயரம் :————.
நெஞ்சு (மூச்சுவிட்ட நிலை) :————.

6. 73.12.31 ஆம் திகதியில் வயது :————.
பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட வேண்டும்) :————.

7. (அ) தேசிய இனம் :————.
(ஆ) நீங்கள் இலங்கைப் பிரசையானது பிறப்பாலா, அல்லது பதிவினாலா ? :————.
(பதிவினாலாயின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்)
(இ) பிறப்பினால் இத்தேசப் பிரசையாயின் பின்வருவோர் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :—.
விண்ணப்பதாரர் :————.
விண்ணப்பதாரரின் தகப்பனர் :————.
விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப் பாட்டனர் : ————.
விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப் பூட்டனர் : ————.

8. (அ) தற்போதைய முகவரி :————.
(ஆ) தற்போதைய முகவரிக்குக் கிட்டிய பொலிஸ் நிலையம் : ————.

9. (அ) விவாகமானவரா அல்லது தனியாளா ? :————.
(ஆ) வைப்பாட்டி வைத்திருக்கிறீரா ? :————.

10. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சையைக் குறிப்பிட்டு, சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைக்கவும்) :————.

11. சங்கீத தகைமைகள் (பிரதிகள் இணைக்கவும்) :————.

12. விசேட தகைமைகள் ஏதும் உண்டா ? :————.

13. தங்களைப் பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய தங்களுக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக : ————.

14. ஆயுதப் படையில் முன்பு இருந்தீர்களா அல்லது இப்போது இருக்கிறீர்களா அல்லது இலங்கையிலுள்ள பிரித்தானிய கடற்றளங்களில் தொழிலாளியாயிருந்தீர்களா ? (சேவையிலிருந்து விடுபட்ட சான்றிதழின் பிரதி இணைக்கவும்) : ————.

15. எப்போதாவது அரசாங்கத்தின் கீழ் சேவை செய்திருக்கிறீர்களா ? அப்படியாயின் பதவி வகித்த காலம், திணைக்களம், பதவி, அத்திணைக்களத்தை எச்சந்தர்ப்பத்தில் விட்டு நீங்கினீர்கள் என்றும் விபரங்கள் தருக :————.

16. (அ) பொலிஸ் சேவையில் எப்பதவிக்காவது எப்போதாவது விண்ணப்பித்தீர்களா ? (அப்படியாயின் தொடர்பு இலக்கம் குறிப்பிடுக) :————.
(ஆ) முன்பு பொலிஸ் சேவையில் இருந்தீர்களா ?————.

17. தற்போதய தொழில் :————.

18. நீங்களோ அல்லது உங்கள் உறவினர்கள் யாராயினும் ஏதேனும் குற்றம் சம்பந்தமாக தொடர்புபடுத்தப்பட்டோ, அல்லது கட்டளை பிறப்பிக்கப்பட்டோ அல்லது குற்றம் சாட்டப்பட்டோ அல்லது குற்றவாளியாகக் காணப்பட்டோ இருக்கிறீர்களா ? அப்படியாயின் விபரம் தருக :————.

என் அறிவுக்கு எட்டியவரை மேற் கூறிய விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்திக் கூறுகிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12–110—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

கல்வி அமைச்சு

அரசினர் மகா வித்தியாலயங்களிலுள்ள II ஆந் தர விசேட பதவிகள்

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரி 21.9.73 அன்று வெளியான 78 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்துக்குக் கவனம் கோரப்படுகிறது. பயிற்றப்பட்ட பின் ஐந்து வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பயிற்றப்பட்ட சகல ஆசிரியர்களையும் இப்பதவிகளுக்கு விண்ணப்பித்தற்குத் தகுதியுடைவராக்கும் பொருட்டு மேற்குறித்த விளம்பரத்தின் 4 (இ) ஆம் (iv) ஆம் (v) ஆம் உப-பிரிவுகள் நீக்கப்பட்டுப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் விளம்பரம் திருத்தி அமைக்கப்படுகிறது :

"(iv) பயிற்றப்பட்டபின் ஆகக்குறைந்த பட்சம் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியராக இருக்க வேண்டும் ; அல்லது"

இதற்கிணங்க குறித்த விளம்பரத்தின் 4(இ) ஆம் (vi) ஆம், (vii) ஆம் உப-பிரிவுகள் (v) ஆம் (vi) ஆம் உப-பிரிவுகளாக மாற்றி அமைக்கப்படுகின்றன.

2. இத்திருத்தம் காரணமாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்தற்கான கடைசித் திகதி 1973.12.29 வரை நீடிக்கப்படுகிறது.

3. 21.9.73 ஆந் திகதிய 78 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியான விளம்பரத்துக்கமைய ஏற்கனவே விண்ணப்பித்துள்ளவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

கல்வி அமைச்சின் செயலாளரும்
மகா வித்தியாதிபதியும்.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
பலாய் வீதி, கொழும்பு 2,
1973 நொவெம்பர் 28.

12–128—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

இல. வெ.மு/4/162

**கல்வி அமைச்சு**

**மலேசியாவில் செல்லுபடியான பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள், 1974**

பின்வரும் துறைகளிலான பட்டப்பின் படிப்புகளுக்கு அல்லது ஆராய்ச்சி வேலைகளுக்கு, 1974 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள் திட்டத்தின் கீழ் மலேசியா அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

கலைகள்
விஞ்ஞானம்
மருத்துவம்
விவசாயம்
எந்திரவியல்
பொருளியலும் நிர்வாகமும்
கல்வி

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத்தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

**2. கால எல்லை.**—புலமைப் பரிசில்களின் கால எல்லை சாதாரணமாக இரண்டு வருடங்களாகும்.

எனினும், துர்நடத்தை வாவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு மலேசியா அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

**3. தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும் ;

(ii) 1974.1.1. அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும் ;

(iii) விரும்பும் பாடநெறிக்குப் பொருத்தமான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் II ஆம் வகுப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(iv) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.1.1974 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

**4. அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) மலேசியன் தொடர்புக் குழுவால் ஒழுங்குபடுத்துவதற்கமைய மலேசியாவுக்குப் போய்த்திரும்புதற்கான ஆகக் கிட்டிய மார்க்கத்தால் கடல் மூலம் அல்லது விமான மூலம் சுற்றுப் பயணத்தார் வகுப்புப் பிரயாணம் (புலமைப் பரிசில் பெற்றுச் செல்பவருடன் செல்லும் மனைவி தவிர்ந்த அவரில் தங்கியிருக்கும் வேறெவருடைய செலவுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டில்லை) ;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கற்கை, ஆய்கூட, பரீட்சைக் கட்டணங்கள் ;

(இ) மாதாந்தம் கொடுபடும் சொந்தத் தாபரிப்புச் சகாயப்படி, இது வருடாந்தம் M$ 6,000 விதமாகும் ;

(ஈ) வருடாந்தம் M$ 150 பெறுமதியான புத்தக அல்லது உபகரண கொடை ;

(உ) மலேசியாவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட பிரயாணத்திற்கென வருடாந்தம் M$ 200 வரையான கொடை ;

(ஊ) புலமைப் பரிசில் பெற்றுச் செல்லும் விவாகம் செய்த ஆண் ஒருவருடன் அவருடைய மனைவியும் செல்லுமிடத்து வருடாந்தம் M$ 1,200 வீதம் மேலதிக விவாகச் சகாயப்படி, புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிக்கும் நேரம் விவாகம் செய்திராவிடின் புலமைப் பரிசில் செல்லுபடியான முதல் வருடம் இச்சகாயப்படி வழங்கப்படமாட்டாது. மனைவியும் ஒரு புலமைப் பரிசில் பெற்றுச் செல்லுமிடத்து அல்லது மலேசியாவில் வேதனம் பெறும் உத்தியோகத்தில் இருப்பினும் இச்சகாயப்படி வழங்கப்படமாட்டாது.

(எ) பின்வருவனவை தவிர அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலைச் செலவுகள் :—

(i) செவிப்புல துணைச்சாதனங்கள், (ii) மூக்குக் கண்ணாடி, (iii) எவ்வித பற் சிகிச்சையும்.

குறிப்பு—இப்புலமைப் பரிசில்களுக்கு தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

**5. நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந் நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தாரதரப்பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

**6. உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், மலேசியாவுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

**7. வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் மலேசியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல் நலன், மனநலன் உடையவரா என பரிசீத்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

**8.** உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்ற வராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 21.12.1973 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள் பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத் தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தல் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2, 1973 ம் ஆண்டு நவம்பர் 27 ந் திகதி.

12–133—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89.

---

## பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு

கட்டிடக் கலைஞர் பதவி

### நாடு நகர நிர்மாணத் திணைக்களம்

நாடு நகர நிர்மாணத் திணைக்களத்திலுள்ள கட்டிடக்கலைஞர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அறிவித்தலுடன் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவங்களில் தயாரிக்கப்பட்டு, செயலாளர், பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 7 என்ற முகவரிக்குப் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்:

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1974.01.07.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1974.01.15.

குறிப்பு.— (i) கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப் படிவங்களைப் பதிவஞ்சல் மூலம் அனுப்பும்படி அபேட்சகர்களுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் தபாலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு அண்மையிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்குப் பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை குடியரசின் உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகள்.—(அ) இப்பதவி நிரந்தரமானது. ஆனால் உபகாரச் சம்பளம் அற்றது. நியமனங்கள் சேமலாப அடிப்படையில் அமையும். எனினும், அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை 31.12.71 அன்று வகித்தும் தற்போது அத்தகைய நிரந்தர பதவிகளில் இருந்தும் வருபவர்கள் உபகாரச்சம்பள உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள்.

(ஆ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார்கள். நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித்துடைய ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவர் ஒரு வருட காலத்திற்குப் பதிற் கடமை புரியும் வகையில் நியமிக்கப்படுவார். பதவியில் உறுதிப்படுத்தப்பட்டதும், பொருத்தமான சம்பள அளவுத் திட்டத்தில் அத்தரத்திற்குப் பதவி உயர்ச்சி பெற்ற திகதியிலிருந்து தாபனச் சட்டக் கோவைப் பிரமாணங்களுக்கமைய வைக்கப்படுவார்.

3. சம்பளங்களும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—ரூபா 7,800—9 × 360 அத்துடன் 11 × 480 வருடாந்தச் சம்பளம் ரூபா 16,320 வரை உயரும். வருடாந்தச் சம்பளம் ரூபா 9,600 க்கு முன்பும் ரூபா 13,920 க்கு முன்பும் வினைத் திறமைகாண் தடைகள் உள. முழுத் தொழிற் தகைமைகள் உள்ள அபேட்சகர் ஆண்டு ரூபா 9,960 என்ற தொடக்கச் சம்பள நிலையில் கணிக்கப்படுவர். ரூபா 13,440 க்கு மேற்பட்டதாகச் சம்பளம் பெறும் பொருட்டு பூரண தொழிற்றகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) சிறந்த நற்குணமுடையவராயும், உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) (i) பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர் அரச நிறுவனத்தின் கூட்டு உறுப்பினர் ஒருவராகவோ, அல்லது

(ii) அவுஸ்திரேலியா கட்டிடக் கலைஞர் அரச நிறுவனத்தின் கூட்டு உறுப்பினர் ஒருவராகவோ, அல்லது

(iii) பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர் அரச நிறுவனத்தில் அல்லது அவுஸ்திரேலியா கட்டிடக் கலைஞர் அரச நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் 1 ஆம், 2 ஆம் பகுதிகளில் சித்தி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

(இ) 1974.01.07 ஆம் திகதியில் 22 வயதிற்குட்படாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கப்படும் பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு ; இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற் தகைமையும் தொழில் நுட்பத் தகைமையும், உயர் தொழிற் தகைமை அல்லது தொழில் நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளையாவது விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

6. அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியைப் பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு நேராக அவர்கள் அறிவிக்க வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும், உத்தியோகப் பூர்வமாக செயலாளர், பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு என முகவரி இட்டு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி, பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக் கூடாது.

8. இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் I ஆம் பகுதி (II அ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். பெற்றுக் கொண்டமைக்கான அறிவித்தல் கடைசித் திகதியிலிருந்து இரண்டு வாரத்திற்குள் பெறாதவர்கள், உடனடியாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதும் உடையராகார்.

பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 27 ந் தெ.

டி. இராஜேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(ஒரு வித சாதனங்களும் சாதனங்களின் பிரதிகளும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படல் ஆகாது.)

**நாடு நகர நிருமாணத் திணைக்களம்**

கட்டிடக் கலைஞர் பதவி

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்தில்) : ———.

2. முகவரி (முகவரியில் ஏதேனும் மாற்றமேற்படின் உடனடியாக அறிவித்தல் வேண்டும்) : ———.

3. (அ) பிறந்த திகதி : ———.
வருடம் : ———. மாதம் : ———. நாட்கள் : ———.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று சரியான வயது : ———.
வருடம் : ———. மாதம் : ———. நாட்கள் : ———.

4. நீர் இலங்கைப் பிரசையாகப் பதிவு செய்யப்பட்டவரா அல்லது வம்சாவழியினரா : ———.
(பதிவு செய்யப்பட்ட பிரஜையாயின் பதிவுச் சான்றிதழ் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) : ———.

5. பிறந்த இடம் : ———.

(அ) விண்ணப்பதாரர் : ———.

(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை : ———.

(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : ———.

(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பூட்டன் : ———.

(விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயிருப்பின் (அ) என்பதுடன் (ஆ) என்பதும் அல்லது (இ), (ஈ) இரண்டுமே நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயில்லாதிருப்பின், (அ) என்பதுடன் (ஆ) உம் (இ) உம் அல்லது (இ) உம் (ஈ) உம் நிரப்பப்படல் வேண்டும்).

6. (அ) பால் : ———.

(ஆ) விவாகஞ் செய்தவரா ? செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ———.

7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை :

(1) சிங்களம்

(2) தமிழ்

(3) ஆங்கிலம்

8. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள் அல்லது கல்லூரிகளும் வேறு நிலையங்களும் : ———.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| 1. | | | 1. | | |
| 2. | | | 2. | | |

9. உடற் பயிற்சி விளையாட்டுக்கள் சம்பந்தமாகப் பெறப்பட்ட ஏதேனும் தனிச் சிறப்புக்களினதும் விளையாட்டுத் துறையில் வகித்துள்ள ஏதேனும் பொறுப்பு வாய்ந்த பதவிகளினதும் விபரங்கள் : ———.

10. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எந்த அளவுக்கு ?

11. சட்ட நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் குற்றத்திற்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின், வழக்கின் திகதி, இலக்கம் என்பவற்றுடன் அது பற்றிய முழு விபரங்களையுந் தருக : ———.

12. கல்வித் தகைமைகளும் உயர்தொழிற் தகைமைகளும் : ———.
(பெறப்பட்ட சகல பட்டங்கள், விசேட சித்திகள், உயர்தொழில் தகைமைகள் என்பன பற்றிய விபரங்கள், அவற்றின் திகதிகள், இருப்பதாயின் வகுப்புகள், எடுத்துள்ள பாடங்கள், நிலையங்களின் பெயர்கள்).

13. தற்போதைய உத்தியோகமும் முன்னைய உத்தியோகமும் : ———.

(அத்தகைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியும், விட்டு விலகிய திகதியும் கடைசி வருடாந்த சம்பளமும்).

| பதவிப் பெயர் | தொடக்கம் | வரை | வருடாந்த சம்பளம் ரூபா |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

பின் குறிப்பு .—கீழ்வரும் நிரல் 15 இல், அரசாங்கத்தின் கீழுள்ள ஏதேனும் சேவையினின்றும் நிறுத்தப்பட்டதற்காய காரணங்கள் கொடுக்கப் படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள் : ———.

(விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தகைமைகளையும் அல்லது அனுபவத்தினையும் நீர் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின் அவை பற்றிய முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விசேட தகைமைகளுக்கு வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்க).

15. வேறு ஏதேனும் விபரங்கள் : ———.

16. இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் கொடுக்கப்பட்ட விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றனவாகவோ தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், விண்ணப்பித்தற்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி : ———.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

விண்ணப்பதாரர் பொதுச் சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் விதப்புரை :

திகதி : ———.

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

12-162—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

**பொதுநிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு**

நாடு நகர நிருமாணத் திணைக்களம்

**தகுதிகாண் நிலை நகர நிருமாண உதவியாளர் பதவி**

நாடு நகர நிர்மாணப் பகுதியில் தகுதிகாண் நிலை நிருமாண உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலுடன் தொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு, செயலாளர், பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 7 என்ற முகவரிக்குப் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1974.01.07.

(ஆ) வெளிநாட்டுவிண்ணப்பங்கள் : 1974.01.15.

**குறிப்பு** :—(1) கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பப் படிவங்களைப் பதிவஞ்சல் மூலம் அனுப்பும்படி அபேட்சகர்களுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பப்படிவம், அல்லது அத்தகையபடிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, பொது நிருவாக உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை குடியரசின் உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய சட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகள்** :—(1) (அ) இப்பதவி நிரந்தரமானது. ஆனால் உபகாரச் சம்பளமற்றது. நியமனங்கள் சேமலாப அடிப்படையில் அமையும். எனினும், அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தரமான, உபகாரச்சம்பள உரித்துடைய பதவிகளை 31.12.71 அன்று வகித்தும் தற்போது அத்தகைய நிரந்தர பதவிகளில் இருந்தும் வருபவர்கள் உபகாரச்சம்பள உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள்.

(ஆ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின் முதற்கண் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார்கள். நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித்துடைய ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவர் ஒருவருட காலத்திற்குப் பதிற் கடமைபுரியும் வகையில் நியமிக்கப்படுவார். பதவியில் உறுதிப்படுத்தப்பட்டதும் பொருத்தமான சம்பள அளவுத் திட்டத்தில் அத்தரத்திற்குப்பதவி உயர்ச்சி பெற்ற திகதியிலிருந்து தாபனச் சட்டக் கோவைப்பிரமாணங்களுக்கமைய வைக்கப்படுவார்.

(2) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் வெளிநாடு சென்று நகர நிர்மாண அமைப்புப் பற்றி பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெறுவர்.

3. **சம்பளங்களும் படிகளும்.**—இப்பதவிக்குரிய **கூட்டுச்** சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—ஆண்டுக்கு 360/- ரூபாவாகிய ஆறு ஆண்டு ஏற்றங்களுடன் 6,720/- ரூபாவிலிருந்து 8,880/- ரூபா வரை செல்லும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்றுகள் காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும், உடல்நலமுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1974, ஜனவரி மாதம் 07 தேதியில் 35 வயதிற்கு மேற்படாமலும் 22 வயதிறகுக் குறையாமலும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவவயதுக் கட்டுப்பாட்டின எல்லைகள் அமையாது).

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து சமூகவியலில் அல்லது பொருளியலில் விசேடபட்டம் பெற்றவர்களாக இருத்தல் வேணடும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**— சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) நற்சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற் தகைமையும், தொழில் நுட்பத் தகைமையும் ; உயர் தொழிற் தகைமை அல்லது தொழில் நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு** :—(1) சாதனங்களையும் சாதனங்களின் படிவங்களையும் விண்ணப்பப்படிவங்களுடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச்சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களங்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கே நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதங்களையும் உத்தியோகபூர்வமாக செயலாளர், பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இந்த அமைச்சில் உள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் III ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். பெற்றுக் கொண்டமைக்கான அறிவித்தல் கடைசித் திகதியிலிருந்து இரண்டு வாரத்திற்குள் பெறாதவர்கள் உடனடியாக பொது நிருவாக உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக்கவனிக்கும்படி கேட்கும் உரிமை ஏதும் உடையாராகார்

பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7.
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 27 ந் உ.

டி. இராஜேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(ஒரு வித சாதனங்களும் சாதனங்களின் பிரதிகளும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படல் ஆகாது.)

**நாடு நகர நிருமாணத் திணைக்களம்**

தகுதிகாண் நிலை நகர நிருமாண உதவியாளர் பதவி

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்தில்) : ————.
2. முகவரி (முகவரியில் ஏதேனும் மாற்றமேற்படின் உடனடியாக அறிவித்தல் வேண்டும்) : ————.
3. (அ) பிறந்த திகதி : ————.
   வருடம் : ————. மாதம் : ————. நாட்கள் : ————.
   (ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்காய கடைசித் திகதியன்று சரியான வயது : ————.
   வருடம் : ————. மாதம் : ————. நாட்கள் : ————.
4. நீர் இலங்கைப் பிரசையாகப் பதிவு செய்யப்பட்டவரா அல்லது வம்சாவழியினரா : ————.
   (பதிவு செய்யப்பட்ட பிரசையாயின் பதிவுச் சான்றிதழ் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) : ————.
5. பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பதாரர் : ————.
   (ஆ) விண்ணப்பதாரரின் தந்தை : ————.
   (இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பூட்டன் : ————.
   (விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயிருப்பின் (அ) என்பதுடன் (ஆ) என்பதும் அல்லது (இ), (ஈ) இரண்டுமே நிரப்பப்படல் வேண்டும் விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயில்லாதிருப்பின், (அ) என்பதுடன் (ஆ) உம் (இ) உம் அல்லது (இ) உம் (ஈ) உம் நிரப்பப்படல் வேண்டும்).
6. (அ) பால் : ————.
   (ஆ) விவாகஞ் செய்தவரா ? செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.
7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை :
   (1) சிங்களம்
   (2) தமிழ்
   (3) ஆங்கிலம்
8. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள் அல்லது கல்லூரிகளும் வேறு நிலையங்களும் : ————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| 1. | | | 1. | | |
| 2. | | | 2. | | |

9. உடற் பயிற்சி விளையாட்டுக்கள் சம்பந்தமாகப் பெறப்பட்ட ஏதேனும் தனிச் சிறப்புக்களினதும் விளையாட்டுத் துறையில் வகித்துள்ள ஏதேனும் பொறுப்பு வாய்ந்த பதவிகளினதும் விபரங்கள் :————
10. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எந்த அளவுக்கு ?
11. சட்ட நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் குற்றத்திற்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின், வழக்கின் திகதி, இலக்கம் என்பவற்றுடன் அது பற்றிய முழு விபரங்களையுந் தருக : ————.
12. கல்வித் தகைமைகளும் உயர்தொழிற் தகைமைகளும் : ————.
    (பெறப்பட்ட சகல பட்டங்கள், விசேட சித்திகள், உயர்தொழில் தகைமைகள் என்பன பற்றிய விபரங்கள், அவற்றின் திகதிகள், இருப்பதாயின் வகுப்புகள், எடுத்துள்ள பாடங்கள், நிலையங்களின் பெயர்கள்).
13. தற்போதைய உத்தியோகமும் முன்னைய உத்தியோகமும் : ————.

(அத்தகைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியும், விட்டு விலகிய திகதியும், கடைசி வருடாந்த சம்பளமும்.)

| பதவிப் பெயர் | தொடக்கம் | வரை | வருடாந்த சம்பளம் ரூபா |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

**பின் குறிப்பு** :—கீழ்வரும் நிரல் 15 இல், அரசாங்கத்தின் கீழுள்ள ஏதேனும் சேவையினின்றும் நிறுத்தப்பட்டதற்காய காரணங்கள் கொடுக்கப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள் : ————.
    (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தகைமைகளையும் அல்லது அனுபவத்தினையும் நீர் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின் அவை பற்றிய முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விசேட தகைமைகளுக்கு வர்த்தமானி அறிவித்தலைப்பார்க்க).

15. வேறு ஏதேனும் விபரங்கள் :————.

16. இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் கொடுக்கப்பட்ட விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றனவாகவோ தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், விண்ணப்பித்தற்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நஷ்டஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி ————,

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

விண்ணப்பதாரர் பொதுச் சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் விதப்புரை.

திகதி : ————.

————.
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

12–161—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

## சமூக சேவைப் பகுதி

### வேலைத்தல மனேஜர் பதவி—அங்கவீனர் பயிற்சி நிலையம்—அம்பிட்டி

சமூக சேவைப் பகுதியில், அம்பிட்டி அங்கவீனர் பயிற்சி நிலையத்தில் வேலைத்தல மனேஜர் பதவிக்கு விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில், கண்டிப்பாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், 1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ந் திகதிக்குப் பிந்தாமல், சமூக சேவை அதிகாரி, 136, வைக்சோல் வீதி, கொழும்பு-2, என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. **இப்பதவிக்கு வகுக்கப்பட்ட திரட்டிய சம்பள விகிதம் :**—வருடம் ரூபா 6,024—4 × 144—8 × 180—ரூபா : 8,040 (ரூபா 6,780/- அல்லது ரூபா: 7,500/- முன் திறமைகாண் தடை).

3. **நியமன நிபந்தனைகள்:**—இப்பதவி நிரந்தரமானது. ஆனால் பென்ஷன் வசதி இல்லாதது. தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், அரசாங்க சேவைச் சகாய நிதிக்குப் பணங்கட்டுதல் வேண்டும்.

4. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

(அ) 1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ந் திகதியில் 25 வயதிற்குக் குறையாதவர் என்றும், 45 வயதிற்கு மேற்படாதவரென்றும் அத்தாட்சிப்படுத்தப் பிறப்புச் சாட்சிப் பத்திரம் வழங்குதல் வேண்டும்.

குறிப்பு:—(இவ்விலாகாவைச் சேர்ந்த ஊழியர்கட்கு இந்த வயதுக் கட்டுப்பாடு இல்லை)

(ஆ) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில், அல்லது பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரண பரீட்சை) சிங்களம்/தமிழ், எண்கணிதம்/பீச கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் ஆகக்கூடியது 2 தடவையில் எழுதிச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(i) கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் பரீட்சைப் பத்திரம் (இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி) (தொழில்நுட்பம்-மின்சார இயல்) அல்லது;
(ii) அம்பாறை ஹாடி தொழில் நிலையத்தால் வழங்கப்பட்ட டிப்புளோமா பத்திரம் அல்லது;
(iii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட பொறியியல் என்ஜினியர் வகுப்பு (பின்னோர)ப் பத்திரம். அல்லது;
(iv) அதற்கு இணையான வகுப்புப் பத்திரம், அத்துடன்;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு தாபனத்தில், தொழில்நுட்ப முறையில் 5 வருட வேலை அனுபவம்,

குறிப்பு :—கட்டிடக் கலையில் சாதன அனுபவம் பெற்ற விண்ணப்பதாரர்கட்கு முதலிடம் கொடுக்கப்படும்.

(ஈ) நற்குணம் உடையவராயும் தேக ஆரோக்கியம் உடையவராயும் விண்ணப்பதாரர் இருத்தல் வேண்டும்.

5. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட திகதிக்குப் பிந்தாமல் இந்த இலாகாவிற்கு வந்து சேருதல் வேண்டும். குறிக்கப்பட்ட திகதிக்குப் பிந்தினால், விண்ணப்பங்களை அனுப்பும் இலாகா அதிகாரிகள் பிந்தினமைக்கு ஏற்ற காரணத்தைக் குறித்து அனுப்பினால் ஒழிய ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை மட்டும் (மூலப் பிரதிகள் தவிர்த்து) இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்தானத்திற்கு அல்லது வித்தியாரம்பத்திற்கு எடுக்கப்பட்ட பத்திரம் செல்லுபடியாகாது),

(ஆ) படிப்புக் கல்வி, தொழிற் கல்வி, மற்றும் மேலே 4 ம் பந்தியில் குறிக்கப்பட்ட துறைகட்குரிய கல்வித் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் பத்திரங்கள்,

(இ) விண்ணப்பதாரரின் நற்குணத்தையும், இப்பதவிக்கு நியமனம் பெற ஏற்ற தகைமையையும் ருசுப்படுத்தும் புதிய இரு நற்சாட்சிப் பத்திரங்கள். (அரசாங்க சேவையில் இருந்து அனுப்பும் விண்ணப்பதாரர் இவ்வித நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்பவேண்டியதில்லை.)

7. இப்பதவிக்கான விண்ணப்பங்களும், அது பற்றிய வேறேதும் கடிதத் தொடர்புகளும். சமூக சேவை அதிகாரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். தவிர, அவைகளை இந்த இலாகாவில் உள்ள எந்த உத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பக் கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ம் பகுதி (IIஅ) ம் தொகுதியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும், அரசாங்க சேவைப் பதவி நியமனங்கட்கு பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

எஸ். டபிள்யு. குணவர்த்தன,
சமூக சேவை அதிகாரி.

சமூக சேவைப் பகுதி,
த. பெ. இல. 577,
136, வைக்சோல் வீதி,
கொழும்பு—2.
1973.11.27.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

### வேலைத்தல மனேஜர் பதவி—அங்கவீனர் பயிற்சி நிலையம்—அம்பிட்டி

1. முழுப்பெயர் :————.
   (கொட்டை எழுத்தில்)
   (அ) குடும்பப் பெயர் :————.
   (ஆ) ஏனைய பெயர்கள்:————.
2. தபால் விலாசம்:————.
   (அ) 1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ந் திகதியில் சரியான வயது :————.
   வருடம் ———— மாதம்———— நாட்கள்————.
   (ஆ) பிறப்புத் திகதி:————.
   (பிறப்புச் சாட்சிப் பத்திரம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
4. (அ) சாதி:————.
   (ஆ) இலங்கைப் பிரசையா எழுதவும்:————.
   (i) பிறப்பால்:————.
   (ii) பதிவால்:————.
5. விவாகஞ் செய்தவரா? பிரமச்சாரியா?:————.
6. (அ) கல்வித் தகைமைகள் :————.
   (i) சிங்களம்:————.
   (ii) தமிழ்:————.
   (iii) ஆங்கிலம்:————.
   (ஆ) தொழிற் கல்வித் தகைமைகள் :————.
   (இ) விசேஷ தகைமைகள் ஏதும் இருப்பின் :————.
   (பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)
7. பின்வரும் பாஷைகளில் எழுத வாசிக்கத் தெரியுமா ?—
   (i) சிங்களம் :————.
   (ii) தமிழ் :————.
   (iii) ஆங்கிலம் :————.
8. பாடசாலை விட்டதிலிருந்து நீர் பார்த்த உத்தியோகத்தின் விபரம்:————.
9. உங்கள் திறமையையும் நற்குணத்தையும் அறிவதற்கு இரு பிரமுகர்களின் பெயர்களையும் விலாசத்தையும் தருக :————.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற இரு பிரமுகர்களின் பெயர்களைத் தருக:————.

————,
திகதி:————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

12-127—07.12:73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

## கமத்தொழிற்றிணைக்களம்

### வேலைப் பரிசோதகர் பதவிகள்

கமத்தொழில் திணைக்களத்தில் வேலைப் பரிசோதகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதனுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை ஒத்த விண்ணப்பங்களைத் தயாரித்து, 1973.12.31 திகதியன்றோ அல்லது அதன் முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக பிரதி கமத்தொழில் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை, அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்:** பதவிக்கான திரட்டிய வேதனம் வருடாந்தம் ரூபா 4,152/—16 இன் 144—ரூபா 6,456/- ஆகும். வருடாந்த வேதனம் ரூபா 5,304/- ஆகுமுன்பு வினைத்திறமைகாண் தடை இடம்பெறும்.

3. **வேலை நியதி:** பதவி நிரந்தரமானது. பொது சேவையாளர் சேமலாப நிதியத்திற்கு உதவுதொகை செலுத்த வேண்டும். உத்தியோகத்தர் தனது திரட்டிய வேதனத்தின் 6% ஐ பொது சேவையாளர் சேமலாப நிதியத்திற்கு வழங்கும்பொழுது, அரசாங்கம் பொது சேவையாளர் சேமலாப நிதியத்திற்கு திரட்டிய வேதனத்தின் நூற்றுக்கு 9 விகிதத்தை உதவுதொகையாக வழங்கும்.

தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் 31.12.1971 க்கு முன்னிருந்து நிரந்தரமும் உபகாரச் சம்பளமும் உடைய பதவியை வகிப்பவராகவிருப்பின் அவர் உபகாரச் சம்பளம் பெறும் அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

4. **தேவையான தகைமைகள்:** மனுச் செய்வோர் ஒவ்வொருவரும் தமது தகைமை குறித்துப் பின்வருவனவற்றிற்குச் சான்று தர வேண்டும்.

(அ) சிறந்த நன்னடத்தையும் தேகாரோக்கியமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) 1973.12.31 ந் திகதியில் 25 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (எற்கெனவே பொது சேவையிலுள்ளோர்க்கு இவ்வயதெல்லை பிரயோகமாகாது).

(இ) (i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் சித்தி பெற்று கணிதம் பௌதிகவியல் ஆகிய இரண்டிலும் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) சிங்களம்/தமிழ் உடன் அல்லது பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணம்) கணிதம், பௌதிகவியல் பாடத்துடன் மற்றும் மூன்று பாடங்களில் திறமைச் சித்தி-இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல்-பெற்றிருக்க வேண்டும்; அத்துடன்

(ஈ) (i) இலங்கை தொழில்நுட்ப கல்லூரியின் கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் தராதரப் பத்திரம் அல்லது கல்லோயா அபிவிருத்திச் சபை கார்டி தொழில்நுட்ப நிறுவனத்தின் தகுதித் தேர்வுத் தராதரப் பத்திரம் அல்லது கட்டிட நிருமாணம் போன்ற நீர்வழங்கல் நிருமாண வேலையில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவத்துடன் நில அளவையிலும் மட்டம் பார்த்தலிலும் அளவையாளர் நாயகத்தின் உத்தரவுச் சீட்டு

அல்லது

(ii) ஐந்து வருட சிவில் அல்லது பொறிமுறை தொழில் பயிற்சி அல்லது மொத்தமாக ஐந்து வருடங்களைக் கொண்ட தொழிற் பயிற்சியும் செய்முறை அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

மனுப்பண்ணுவோர், மேற்சொன்ன எத்தகைமையுடன் மேலதிகமாக நில அளவையில் மட்டம் பார்த்தல், கட்டிட நிருமாணம் அல்லது பெருமளவிலான நிருமாண வேலையில் கோட்பாட்டறிவும் செய்முறை அறிவும் பெற்றிருக்கவேண்டும்.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் பத்திரங்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ். (குறிப்பு.—ஞான தீட்சைப் பத்திரம் அல்லது உதவிபெறும் பாடசாலைகளின் தேவைக்காக வழங்கப்பட்ட பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

(ஆ) கல்வித் தகைமைக்கான உயர் பத்திரம்.

(இ) அண்மையில் பெற்ற மூன்று நற்சான்றுப் பத்திரங்கள்.

(ஈ) தொழில்நுட்பத் தகைமையும் அனுபவம் தொடர்பானதுமான பத்திரங்கள்.

குறிப்பு.—இப் பத்திரங்களின் மூலப் பிரதிகள் அனுப்பப்படக் கூடாது.

6. விண்ணப்பங்கள் அல்லது அது தொடர்பான வேறு தொடர்புகள் பிரதி கமத்தொழில் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை என்ற முகவரியுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பங்களை அல்லது வேறு தொடர்புகளை எனக்கோ அல்லது இத்திணைக்கள உத்தியோகத்தர் வேறு எவருக்குமோ நேரடியாக எழுதக்கூடாது.

7. இவ் வர்த்தமானி பகுதி I பிரிவு (IIஅ) இன் ஆரம்பத்தில் பொது சேவையாளர் நியமனத்திற்கு எனப் பிரசுரிக்கப்பட்டுள்ள பொது நிபந்தனைகளின் பால் உங்களது கவனத்தைச் செலுத்தவும்.

எல். பீ. மாரம்பே,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்).

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை, 1973.11.22.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

வேலைப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர்.————.
2. விலாசம்.————.
3. 1973.12.31 திகதியில் வயதும் பிறப்புத் தினமும். (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படவேண்டும்)————.
4. சாதியம்.————.
5. விவாகமானவரா அல்லது தனித்தவரா?————.
6. நீங்கள் இலங்கைப் பிரசையா?————.
   (1) பரம்பரையால்.————.
   (2) பதிவால்.————.
7. கல்வி தொழில்நுட்ப தகைமை.————. (தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்).
8. பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து தொழில்/பயிற்சி விபரங்கள்.————.
9. முன்னர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது பொது கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்திருந்தால் அதைவிட்டு நீங்கியதற்கான காரணங்கள்.————.
10. ஏதாவது குற்றவியல் குற்றத்திற்காக சட்டமன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால் குற்றத்தினதும் தண்டனையினதும் விபரங்களைத் தரவும்.————.
11. அனுப்பப்படும் நற்சான்றிதழ்களை வழங்கியவர்களின் பெயரும் பதவியும்.————.
    1.
    2.
    3.

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் உண்மையானவை சரியானவை என இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன். இதில் தரப்பட்ட விபரங்களில் ஏதாவது பொய்யானது தவறானது எனத் தெரிவிற்கு முன் காணப்பட்டால் நான் தகைமை இழக்கவும், நியமனத்தின் பின் காணப்பட்டால் என்னை நட்டஈடு இன்றி பதவிலிருந்து நிறுத்தப்படவும் நேரிடும் என அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12-88—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### வாகம்பத்து கோறளை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி

மொனராகலை மாவட்டத்தில் பிபிலை பெரும்பாக உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொலகல்வெல கிராம சேவையாளர் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கு கீழ்க்கண்ட தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இதற்கான விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப் படிவத்தில், தமது சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப்பட்டு, 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் கிடைக்கு மாறு அரசாங்க அதிபர், மொனராகலை என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

2. இப்பதவிக்கு எவ்வித சம்பளமும் கொடுக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கும் ரூபா 7/50 மாத்திரம் கொடுக்கப்படும்.

3. தகைமைகள்.—(அ) 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி 30 வயதுக்கு குறையாமலும் 60 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் வாகம்பத்து கோரளை பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(இ) குறைந்தளவு சிங்களம்/ஆங்கிலம் 7 ஆம் வகுப்பு சித்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) சிறந்த ஒழுக்கமுடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.
(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்.
(இ) அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

5. அரசாங்க அல்லது கூட்டுத்தாபன ஊழியர்களும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க உரிமையற்றவர்களானபடியால் அவர்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் கிடைத்ததுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

நிமல் சமரசுந்தா,
உதவி அரசாங்க அதிபர்,
மொனராகலை அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி,
மொனராகலை,
73.11.21.

#### மாதிரிப் படிவம்

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :————.
   விலாசம் :————.
2. நிரந்தர வசிப்பிடமும், அங்கு வசிக்கும் காலமும் :————.
3. 1973.12.31 இல் வயது :————.
   பிறந்த திகதி :————. பிறந்த இடம் :————.
4. கல்வித் தகைமைகள் :————.
5. தற்போது செய்யும் தொழில் :————.
6. இதற்கு முன் ஏதும் தொழில் செய்திரா, அப்படியாயின் அதன் விபரங்கள் :————.
7. உமது சொத்துக்களின் பெறுமதியும் அதன் விபரங்களும் :————.
8. விண்ணப்பதாரர் கடனாளியா ? அவ்வாறுனால் அதுபற்றிய விபரங்கள் :————.
9. விண்ணப்பதாரர் ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டவரா :————.
10. இப்பதவிக்கு உமக்குள்ள வேறு தகைமைகள் இருந்தால் குறிப்பிடவும் :————.

மேலே தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மை என உறுதிப் படுத்துகின்றேன். பதவி கிடைத்த பின்னரும் இங்கே என்னால் தரப்பட்ட விபரங்கள் ஏதும் பிழை எனக் கண்டு பிடிக்கப்படின் என் நியமனம் நிராகரிக்கப்படும் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

12-109—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89.

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கல்வி அமைச்சு

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு 10

#### படிப்பு நெறிகளுக்கனுமதி—கல்வியாண்டு 1974

பின்வரும் புதிய பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

1. உல்லாசப் பிரயாணத் தகுதித் தேர்வு.—

காலம் : 2 வருடம்.—முழு நேரம், பகல்

மொழி : ஆங்கிலம்

வயது : 1.1.1974 இல் 17 வயசுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை : க.பொ.த. (உயர்தர) சோதனையில் குறைந்தது இரு பாடங்களிற் தேர்ச்சியும், க. பொ. த. (சாதாரண) சோதனையில் ஆங்கில பாஷையில் தேர்ச்சியும் பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.

2. ஹோட்டல் முகாமையும், உணவளிப்பும் :—

காலம் : 2 வருடம்—முழு நேரம், பகல்

மொழி : ஆங்கிலம்

வயது : 1.1.1974 இல் 17 வயசுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை : க.பொ.த. (உயர்தர) சோதனையில் குறைந்தது இரு பாடங்களில் தேர்ச்சியும், க.பொ.த. (சாதாரண) சோதனையில் ஆங்கில பாஷையில் தேர்ச்சியும் பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.

3. அந்நிய பாஷைகளில் தகுதித் தேர்வு :—

காலம் : 2 வருடம்—முழுநேரம், பகல்

மொழி : ஆங்கிலம்

வயசு : 1.1.1974 இல் 17 வயசுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை : க.பொ.த. (உயர்தர) சோதனையில் குறைந்தது மூன்று பாடங்களில் தேர்ச்சியும், க. பொ. த. (சாதாரண) சோதனையில் ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சியும் பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.

4. இசைக் கருவிகள் செய்யப் பழகும் வகுப்புக்கள் :—

காலம் : 3 மாதங்கள் (ஒரு தவணை) பகுதி நேரம்,பகல்

மொழி : சிங்களம்

வயசு : 1.1.1974 இல் 17 வயசுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை : க. பொ. த. (சாதாரண) சோதனையில் 6 பாடங்களிற் சித்தி பெற்றவராயும், மரவேலையில் அல்லது அதற்குச் சமமான ஒன்றிலோ, அல்லது உயர்ந்த தகைமைகள் உடையவராகவோ இருத்தல் வேண்டும்.

5. உருவ அமைப்புத் தொழிலும், பலகணி அடைப்புகளும் பயிற்றுவித்தற்கு :—

காலம் : 2 தவணைகள் (மாலை)

மொழி : சிங்களம்

வயசு : 1.1.1974 இல் 17 வயசுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை : 8 ஆம் வகுப்பு. விண்ணப்பதாரர்கள் மரவேலைத் தொழிலில் இருக்க வேண்டும்.

6. கோணம் செய்யும் வேலையிற் பயிற்றுவித்தற்கு :—

காலம் : 1 வருடம், (மாலை)

மொழி : சிங்களம்.

வயசு : 1.1.1974 இல் 17 வயசுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை ; 8 ஆம் வகுப்பு, விண்ணப்பதாரர்கள் மரவேலைத் தொழிலில் இருக்க வேண்டும்.

7. கொல்லுலை வேலை பயிற்றுதற்கு :—

காலம் : 1 வருடம் (மாலை)

மொழி : சிங்களம்

வயசு : 1.1.1974 இல் 17 வயசுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை ; 8 ஆம் வகுப்பு, விண்ணப்பதாரர்கள் இதற்குத் தொடர்புடைய தொழில் ஈடுபட்டவராக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தில் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள், பதிவுத் தபால் மூலம், 31. 12. 1973 திகதியின் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி பதிவாளருக்கு வந்து சேரத் தக்கதாக, அனுப்பப்படல் வேண்டும்.

ஒருவருடத்துக்குக் குறைந்த பயிற்சிக்கு விண்ணப்பக் கட்டணம் ரூபா 1/- ஒரு வருட காலத்துக்குக் கூடிய பயிற்சிகளுக்கு ரூபா 2/-. இந்த மதிப்பின்படி விண்ணப்பதாரர்கள் முத்திரை ஒட்டி அம்முத்திரையில் அவர்கள் தம்கையொப்பம் இடல் வேண்டும். ஒவ்வொரு பயிற்சிக்கும் வெவ்வேறு விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

குறைந்த மதிப்புள்ள முத்திரைகள் ஒட்டப்பட்ட விண்ணப்பங்களும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் காலம் கடந்து பெற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

எல்லா மாலை வகுப்புகளுக்கும், பகுதி நேர வகுப்புகளுக்கும் கட்டணங்கள் பின்வருமாறு அறவிடப்படும் :

(i) உயர் தொழில் வகுப்புகளுக்கும், தகுதித் தேர்வு வகுப்புகளுக்கும், மாதம் ரூபா 15/-

(ii) தொழில் நுட்ப மட்ட வகுப்புகளுக்கு, மாதம் ரூபா 10/-

(iii) கைப்பணி மட்ட வகுப்புகளுக்கு, மாதம் ரூபா 5/-

ரி. ஓ. பி. பேர்னாந்து,
கல்வி வித்தியாதிபதி (தொழில் நுட்பம்),
மகா வித்தியாதிபதிக்காக.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு-2,
28-11-1973.

(மாதிரி விண்ணப்பப் பத்திரம்—12"×8")

சிறி லங்கா தொழில் நுட்பக் கல்லூரி—கல்வி ஆண்டு 1974

கவனத்திற் கொள்க.—இப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து, "பதிவாளர், சிறீ லங்கா தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு 10" க்குத் நேரடியாக தபால் மூலம் அனுப்பவேண்டும்.

1. வகுப்பு :————. பகல்/மாலை ;————.
2. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தடித்த அச்சுக்களில்) :————.
3. பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :————.
4. (அ) பிறந்த திகதி :————
   (ஆ) 1.1.1974 இல் வயது :————. வருடம் :————. மாதம் :————. நாள் :————.
5. சாதி :————.
6. ஆணு/பெண்ணு :————.
7. சொந்த முகவரி :————.
8. உத்தியோக முகவரி :————.
9. சித்தியடைந்த பரீட்சைகள் ; (வருடம், மாதம், பாடங்கள், தரம் ஆனவை கூறவேண்டும்)
10. விண்ணப்பதாரரின் உத்தியோகமும், உத்தியோக இடத்தின் நேரமும், விலாசமும். (விண்ணப்பதாரர் ஆற்றும் தொழிலின் முழு விபரமும் கொடுக்கப்பட வேண்டும்)
11. தாய் தந்தையர்/பாதுகாவலரின் பெயர், முகவரி, தொழில் :————.
12. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் சரியானவையென நான் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

முத்திரை

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

12-132—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89.

---

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

ஆசிரியர் ஆலோசகர் தராதரப் பரீட்சை, 1973

1974 ஜனவரி மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் இப்பரீட்சையின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 1973 டிசெம்பர் 22 ஆந் திகதியாகும்.

### பிரமாணங்கள்

1. **முகவுரை.**—இப்பரீட்சைப் பிரமாணங்கள் கல்வியமைச்சுடன் கலந்து வகுக்கப்பட்டதாகும். இப்பரீட்சை மகா கல்வியதிபதிக்காகப் பரீட்சாதிகாரியினால் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நடத்தப்படும் இடங்கள்.**—(i) பின்வரும் இடங்களில் பரீட்சை நடைபெறும் :—அநுராதபுரம், பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, களுத்துறை, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகலை, மாத்தறை, இரத்தினபுரி.

(ii) பரீட்சார்த்திகள் தாங்கள் விரும்பிய மூன்று இடங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும். போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாத இடங்கள் நீக்கப்படும்.

(iii) சாதாரணமாகப் பரீட்சார்த்தியால் முதன்முதல் தெரிவுசெய்யப்பட்ட இடத்தை மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது. போதியளவு அறிவித்தல் கொடுக்கப்பட்டதும் மிகவும் கஷ்டங்களையுடையதுமெனக் கருதப்படும் ஒரு விண்ணப்பம் மாத்திரம் அதன் தன்மைக்கேற்பக் கவனிக்கப்படும்.

3. **பரீட்சை மொழி.**—இப்பரீட்சை தமிழ், சிங்களம் என்னும் இரு மொழிகளிலும் நடைபெறும்.

4. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை.**—அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிக் கலாசாலையிற் கற்பித்துக் கொண்டிருக்கும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், பயிற்றப்பட்ட முதலாம் வகுப்பு ஆசிரியர் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பஞ் செய்யலாம். இத்துடன், கல்வியமைச்சினால் அல்லது கல்வியமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட வழிகாட்டற் பயிற்சி வகுப்புகளில் திருப்திகரமாகப் பூரண பயிற்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**—(i) இப்பிரமாணங்களின் பிரகாரம், தேவையான கட்டணத்துடன் விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

(ii) இப்பிரமாணங்களின்படி தகுதி உடையவர்களென விண்ணப்பம் அனுப்பும் பரீட்சார்த்திகளெல்லோரும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். ஆனல் அவ்வாறு அனுமதிக்கப்பட்டமை அவர் அப்பரீட்சைக்குத் தகுதியுடையவரென்பதைக் குறிக்காது. ஒரு பரீட்சார்த்தி இப்பிரமாணங்களின்படி தகுதியற்றவரெனக் காணப்பட்டால் அல்லது தேவையான விபரங்களை மறைத்து வைத்தவராகக் காணப்பட்டால் அல்லது பொய்யான விபரங்களைக் கொடுத்திருந்தால், பரீட்சார்த்தியாந்தன்மை அவரது பரீட்சையின்போதோ அல்லது அதன் பின்னரோ நீக்கப்படலாம். தராதரப் பத்திரம் வழங்கப்பட்டிருப்பின் அது திரும்பப் பெற்றுப் பயனற்றதாக்கப்படும்.

6. **விண்ணப்பங்கள்.**—(i) இப்பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரங்கள் பரீட்சைப் பகுதியினால் வழங்கப்பட மாட்டாது. இவ்வறிவித்தலின் கடைசியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தை 8"×13" அளவினலான தாளில் இரு இரு பக்கங்களிலும் முறைப்படி தயாரித்து (தட்டச்சில் பொறித்தல் நன்று) பாவித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் பத்திரங்களைப் பரீட்சார்த்தி தனது சொந்தக் கையெழுத்தினற் தெளிவாகவும் திருத்தமாகவும் நிரப்புதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத அரைகுறையான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், பரீட்சையின்பின்வரும் குறிப்பிட்ட பரீட்சார்த்தியினது பரீட்சார்த்தியாந்தன்மை நிராகரிக்கப்படும்.

**(iii)** பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் **பதிவு செய்யப்பட்ட கடித மூலம்** விண்ணப்ப முடிவு திகதியிலன்றேல் அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கும்படி பரீட்சாதிகாரி, பரீட்சைப் பகுதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கியுள்ள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**(iv)** விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

**(v)** விண்ணப்பங்களுடன் வேறு எவ்வித உறுதிப்பத்திரங்கள் அனுப்புதல் கூடாது.

7. **பிரவேசக் கட்டணம்.**—பிரவேசக் கட்டணம் ரூபா 25.00. இக்கட்டணம் இறைவரி முத்திரைகள் மூலம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சார்த்தி பிரவேசப் பத்திரத்தில் இவற்றை ஒட்டி இவற்றின் மேல் கையொப்பத்தை இட்டு பயனற்றதாக்க வேண்டும். பயனற்றதாக்காமல் அனுப்பப்படும் முத்திரைகளுக்கு இக்கந்தோர் பொறுப்பேற்காது.

8. **பிரவேச விண்ணப்பங்களை நிராகரித்தல்.**—(i) பின்வரும் பிரவேசப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கும் அறிவிக்கப்படும் :—

(அ) பூர்த்தியற்றதாகவோ, குறைபாடாகவோ, இப்பிரமாணங்களுக்கு அமையாததாகவோ உள்ளவை.
(ஆ) உரிய பிரவேசக் கட்டணப்பணம் இல்லாதிருப்பவை.
(இ) முடிவுத் தேதிக்குப் பின்னர் இக்கந்தோரில் கிடைப்பவை.

(ii) மேலே (1) இல் (அ) அல்லது (ஆ) அல்லது (இ) இல் கூறிய குறைபாடுகளுடன் விண்ணப்பம் அனுப்பிப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தியாந்தன்மை நிராகரிக்கப்படும்.

**(iii)** விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால் அல்லது பரீட்சார்த்தியாந்தன்மை நீக்கப்பட்டால் பிரவேசக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

9. **கட்டணப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தல்.**—ஒரு முறை செலுத்தப்பட்ட கட்டணப் பணம் முழுவதுமோ அல்லது அதன் ஒரு பகுதியோ திருப்பிக் கொடுபடமாட்டாது. எனினும், பரீட்சார்த்தியினுடைய மரணத்தின் அல்லது மிகவுங் கடுமையான நீண்ட காலச் சுகவீனத்தின் (உதாரணமாக : கசநோய், பாரிசவாதம், மூளை அல்லது நரம்புக் கோளாறு முதலியன) விஷயத்தில், பரீட்சார்த்தி ஒரு பாடத்திற்கும் தோற்றுமுனும், பரீட்சாதிகாரி திருப்தியடையக்கூடிய முறையில் ஒரு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் அல்லது மரண அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டும் இருப்பின் முழுக் கட்டணமும் திருப்பிக் கொடுக்கப்படலாம். கட்டணப் பணத்தைத் திருப்பிக்கோரும் விண்ணப்பம் பரீட்சைக் கடைசித் தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ்விண்ணப்பத்தில் பெயர், முகவரி, சுட்டிலக்கம், பரீட்சை இடம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் அனுப்பப்படுகின்ற கட்டணப்பணத்தைத் திருப்பிக்கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

10. **பிரவேசப் பத்திரங்கள்.—பிரசுரத்தைப் பார்த்துத் தம் பிரவேசச் சீட்டைப் பெறுத பரீட்சார்த்திகள் உடனே** பரீட்சாதிகாரி, மலே வீதி, கொழும்பு 2 (“ Exams ”, Colombo) என்ற முகவரிக்குத் தந்தி மூலம் அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்பொழுது மேல்வரும் விபரங்களைக் குறிப்பிடல் வேண்டும் :

(1) பரீட்சையின் பெயர் ;
(2) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(3) பரீட்சார்த்தியினது மு௲வரி ;
(4) பரீட்சைக்குத் தோற்றக் கோரிய பரீட்சை இடங்கள் ;
(5) விண்ணப்பப்பத்திரம் அனுப்பிய தேதி, அதனைப் பதிவு செய்தனுப்பிய தபாற்கந்தோர், பதிவிலக்கம் என்பன.

11. **அடையாளப் பத்திரங்கள்.**—(i) சகல பரீட்சார்த்திகளும் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் தோற்றும்போது பரீட்சை மண்டபத்தில் உள்ள அதிகாரியைத் திருப்திப்படுத்தத்தக்கதாக தாம் இன்னாரென்பதை நிரூபிக்க வேண்டும். இதன் பொருட்டுப் பின்வரும் பத்திரங்களுள் ஒன்று அங்கீகரிக்கப்படும் :—

(அ) தபாற் பகுதித் தலைவர் அளிக்கும் அடையாளச் சீட்டு ;

(ஆ) பரீட்சை நிகழும் தேதிக்கு முன் மூன்று வருடங்களுக்குள் அளிக்கப்பட்டதும் உறுதியுள்ளதுமான வெளிநாட்டுப் பிரயாண அனுமதிச் சீட்டு ;

(இ) பரீட்சை நிகழும் தேதிக்கு மூன்று வருடங்களுக்குள் அரசாங்கப் பகுதியொன்றின் அதிகாரத்தால் அல்லது சட்டப்படியுள்ள ஸ்தாபனத்தால் அளிக்கப்பட்டதும் பரீட்சார்த்தியின் புகைப்படத்தைக் கொண்டுள்ளதுமான பத்திரம்/உத்தரவுப் பத்திரம் அல்லது வேறு பத்திரம்.

(ஈ) ஆட்கள் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை..

(ii) ஆசிரியரான ஒரு பரீட்சார்த்தியிடமிருந்து மேலே கூறியவற்றில் குறிப்பிட்ட பத்திரங்களில் **ஒன்று** அல்லது அதற்குப் பதிலாகப் பரீட்சார்த்தியின் புகைப்படத்தின் ஒரு பிரதி ஏற்றுக்கொள்ளப்படும். புகைப்படப் பிரதி அவ்வாறு ஏற்றுக்கொள்வதற்கு அப்புகைப்படத்தின் மறுபக்கத்தில் அப்பரீட்சார்த்தியின் முழுப்பெயரும், முகவரியும், வழக்கமான கையொப்பமும் அதில் கையொப்பமிட்டவரின் புகைப்படமென்று அப்பரீட்சார்த்தியின் தலைமையாசிரியரின் உறுதிக் கூற்றும் இருத்தல்வேண்டும். பரீட்சார்த்தி தலைமையாசிரியராயிருந்தால் வேறொரு தலைமையாசிரியரின் உறுதிக்கூற்று ஏற்றுக்கொள்ளப்படும்.

12. **பரீட்சைத் திட்டம்.**—(i) 1972 ம் ஆண்டிலும் அதன் பின்னர் நடைபெறும் ஆசிரிய ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சைகளில் கீழ்க் குறிக்கப்பட்டவாறு பாடங்கள் ஐந்தாக இருக்கும் :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கல்வி உளநூல் | 3 மணித்தியாலம் | | 100 புள்ளி |
| 2. | மதிப்பீடும் புள்ளி விபரவியலும் | 3 மணித்தியாலம் | | 100 புள்ளி |
| 3. | மாணவர்களையும் தொழில்களையும் பற்றிய கற்கை | 3 மணித்தியாலம் | | 100 புள்ளி |
| 4. | வழிகாட்டுதலின் தத்துவங்களும் தொழில் நுட்பங்களும் | 3 மணித்தியாலம் | | 100 புள்ளி |
| 5. | பகுதி I—வழிகாட்டுதல் தத்துவம் (வழிகாட்டுதல் தத்துவத்தைச் செயல்முறை நிலைமைகளில் பிரயோகித்தலில் ஒரு பொது வினாப்பத்திரம்) | 1½ மணித்தியாலம் | 60 புள்ளி | |
| | பகுதி II—செயல்முறை வேலை | | 40 புள்ளி | 100 புள்ளி |
| | | | மொத்தம் | 500 புள்ளி |

**(ii)** பரீட்சையில் சித்தியெய்துவதற்கு ஒரே தடவையில் ஐந்து பாடங்களிலும் சித்தியெய்தல் வேண்டும்.

**கவனிக்க.**—பழைய பாடத்திட்டத்தின்படி இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோன்றி சித்தியெய்தத் தவறிய பரீட்சார்த்திகளிற்காக பழைய பாடத்திட்டத்திற்கமைந்த வினாக்கள் போதிய அளவில் கொண்ட பொது வினாப்பத்திரங்கள் இவ்வருடப் பரீட்சைக்கு மட்டுமே தயார் செய்யப்படும். இப்பரீட்சார்த்திகள் 5 ஆம் பாடத்திலிருந்தும் இம்முறை மட்டும் விலக்களிக்கப்படுவர்.

1974 ஆம் ஆண்டு முடிவில் நடைபெற இருக்கும் பரீட்சையிலிருந்து மேற்கூறிய 12 (i) பந்திக்கமைய இப்பரீட்சை நடாத்தப்பெறும்.

13. **பெறுபேறுகள்.**—பரீட்சைக்குத் தோன்றிய எல்லாப் பரீட்சார்த்திகட்கும் அவரவர் சித்தியடைந்த, சித்தியடையாத பாடங்களைக் குறிக்கும் பெறுபேற்று அட்டவணைகள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

14. **தராதரப் பத்திரங்கள்.**—பரீட்சையிற் சித்தியெய்திய பரீட்சார்த்திகளுக்குப் பாடசாலைகளில் ஆசிரியர்—ஆலோசகர்களாகக் கடமையாற்றும் தகுதிக்குரிய தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும். ஆனால் மகாகல்வியதிபதி தேவையெனக் கேட்டுக்கொண்ட யாவும் செய்து முடித்த பின்னரே சித்தியெய்திய பரீட்சார்த்திக்குத் தராதரப் பத்திரம் வழங்கப்படும்.

15. **பாடத் திட்டங்கள்.**—கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களில் சேவைப்பயிற்சி நெறியிற் சேர்ந்து பயிற்சி பெறுபவர்கள் பாடத்திட்டத்துக்குத் தமது விரிவுரையாளருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

16. **பிரமாணங்களில் மாற்றங்கள்.**—பரீட்சையைப் பற்றி அறிவித்தல் செய்யும்பொழுது இப்பிரமாணங்களில் ஏதாவது குறிப்பிட்ட மாற்றங்கள் செய்யப்படின் அவை பத்திரிகைமூலம் அறிவிக்கப்படும். அவ்வித திருத்தங்கள் ஒரே தனிப்பட்ட திருத்தவிதமாக அல்லது முழுப் பிரமாணங்களும் திருத்தப்பட்டதாகப் பிரசுரிக்கப்படும்.

17. **வேறு குறிப்புகள்.**—இப்பிரமாணங்களில் குறிப்பிடப்படாதவை எவையேனுமிருப்பின் மகா கல்வியதிபதியுடன் கலந்தாலோசிப்பதற் கிணங்க, பரீட்சாதிகாரியின் தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படும்.

பரீட்சைத்திணைக்களம்,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு நொவெம்பர் மீ 18 ந் உ.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

இலங்கைப்பரீட்சைத் திணைக்களம்

### ஆசிரியர்—ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சை

பிரவேச விண்ணப்பப் படிவம்

வருடமும் :........................ ஆண்/பெண் :...............................

1. பெயர் (அ) வழக்கமான கையொப்பம் :
(ஆ) முதலெழுத்துக்களுடன் சாதாரண உபயோகத்திலுள்ளது :
(இ) எல்லா முழுப் பெயர்களும் :

(கந்தோர் உபயோகத்துக்காக)
............
சுட்டிலக்கம்

2. இப்பொழுது கடமையாற்றும் பாடசாலை கல்லூரி :
3. சொந்த விலாசம் :
4. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
5. பரீட்சை ஸ்தானம் : (i) .................... (ii) ........................
6. தராதரப் பத்திர விபரங்கள் :
பட்டம் :........................ சர்வகலாசாலை :........................ வருடம் : ................
பட்டத்துக்குப் பின்னர் பெற்ற பயிற்சி :
பயிற்சி நிலையத்தின் பெயர் :........................................................ வருடம் :............

பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திரம் :
மொழி : ....................................
பயிற்சி நிலையம் : ............................
தராதரப்பத்திர இலக்கம் : ......................
தராதரப் பத்திரம் வழங்கப்பட்ட திகதி :............
முதலாம் வகுப்பு தராதரப் பத்திரத்திற்கு உயர்த்தப் பட்ட தேதி : ................................ : ........................இல் இருந்து ......வரை

7. இப்பொழுது கடமையாற்றும் பாடசாலையில் சேவைக் காலம் :

8. சேவையிலிருக்கும்பொழுது தொழில்முறை வழிகாட்டலில் பெற்ற பயிற்சி :
இடம் :......................... காலம் :............ ................இல் இருந்து ................வரை
விரிவுரையாளரின் பெயர் :........................................

9. கட்டணம் :

### முத்திரைகள் ஒட்டுவதற்கான அடைப்பு

**கட்டணம்**—(25 ரூபாவுக்குரிய வருமான முத்திரையை இதில் ஒட்டிப் பரீட்சார்த்தி தனது ஒப்பத்தையும் திகதியையுமிட்டு இவற்றைப் பயனற்றதாக்க வேண்டும். ஒப்பந்தத்தின் பாதி தாளிலும் பாதி முத்திரையிலும் விழக்கூடியதாக ஒப்பத்தை இடல் வேண்டும்.)

மேலே ஒட்டப்பட்ட முத்திரைகள் சுத்தமானவையென்றும், முன்னர் உபயோகிக்கப்படாதவையென்றும் நான் உறுதிப்படுத்துகிறேன். பரீட்சார்த்தி காரியால் வகுக்கப்பெற்ற பரீட்சார்த்திகளுக்காய விதிகளுக்கமைவேன் எனவும் ஒப்புக்கொள்கிறேன்.

பரீட்சார்த்தியின் ஒப்பம் :........................................

திகதி :..............................

பரீட்சார்த்தியின்/கல்லூரித் தலைமையாசிரியரின் உறுதிக்கூற்று :

திரு./திருமதி/செல்வி.............................................. என்பவர் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் குழுவில் உள்ளாரெனவும் 6 ஆம், 7 ஆம், அடைப்புகளில் தரப்பட்டுள்ளனவற்றைப் பரிசீலனை செய்தேனெனவும் அவை சரியெனவும் உறுதிப் படுத்துகிறேன். எனது முன்னிலையில் இவர் இட்ட ஒப்பத்துக்குச் சான்று பகர்கிறேன்.

பரீட்சார்த்தியின் கையொப்பம் :........................
கல்லூரித் தலைவரின் ஒப்பம் :......................
திகதி :..............

கல்லூரி :............................................................................
விலாசம் :............................................................................

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லா பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரசின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதிற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்தமுடியாமற் தடுத்துவைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமென பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும் ; எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரச சேவைகள் ஆலோசனைச் சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுது அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்ளையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல்கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருட்களும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்திலாயத்துக்குப்பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டி விடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கைவழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிலிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைபையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக்கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல், முதலியவற்றை கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறு ஒருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல்விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மைபற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல் பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிருபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர்கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மைபற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத் தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற் பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்ச மாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்கும் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில் வினவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள் கோட்டுரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்கவேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள்பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும்வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத்தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம்பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

12–148—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### அல்-ஆலிம் பரீட்சை—1974

மேற்படி பரீட்சை 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி ஆரம்பமாகும்.

2. அங்கீகரிக்கப்பட்ட மத்றஸாக்களுக்குப் பிரவேச அட்டவணை கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

3. தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்பப் படிவங்களை கொழும்பு-2, மலே வீதியில் உள்ள பரீட்சைத் திணைக்களத்திலிருந்து 1973.12.10 இலிருந்து 1973.12.19 வரை தபால் மூலமும் நேரில் வந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

4. மத்றஸாக்களினதும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினம் 1973.12.20 ஆகும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

மலே வீதி, கொழும்பு-2,
1973 நொவெம்பர் 24 ந் திகதி.

12–82—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கல்விப்பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை ஏப்ரல் 1974

1. பரீட்சை ஆரம்பிக்கும் திகதி :—

இப்பரீட்சை 1974 ம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

2. பாடசாலைப் பிரவேச அட்டவணைகள் :—

1973 ஏப்ரல் பரீட்சைக்கு பரீட்சார்த்திகளைத் தோற்றுவித்த சகல பாடசாலைகளிற்கும் பிரவேச அட்டவணைகள் அனுப்பப்பட்டுள்ளன. இப் பிரவேச அட்டவணைகளைப் பெறாத பாடசாலைத் தலைவர்கள் தமது பாடசாலையிலிருந்து இப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு இத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தேவையான பிரவேச அட்டவணைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

முதற் தடவையாகப் பரீட்சார்த்திகளை தோற்றுவிக்கும் பாடசாலைத் தலைவர்கள் க. பொ. த. ப. (உயர்தர) வகுப்புகளை நடத்துவதற்கு பிரவேசக் கல்விப் பணிப்பாளரினால் அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியுடன் தோற்றவிருக்கும் இப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையையும் குறித்து இத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பிரவேச அட்டவணைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

3. தனிப்பட்ட பரீட்சார்த்திகள்

**விண்ணப்பப் பத்திரங்களைத் தபால் மூலம் பெற விரும்பும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் தமது முகவரி எழுதப்பட்டதும், எஸ்ஜி/5 என இடதுபக்க மூலையில் எழுதப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான நீண்ட தபாலுறைகளை அனுப்பி வைத்தல் வேண்டும்.** (மேற்கூறிய இலக்கத்தை தபாலுறையில் எழுதும் விடயத்தில் விசேட கவனம் காட்டப்படல் வேண்டும்) 1973 டிசெம்பர் 20 ஆந் திகதி வரை மாத்திரமே தபால் மூலம் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். 1974—01—07 தொடக்கம் 1974—01—13 வரையும் விண்ணப்பப் பத்திரங்களைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு நேரில் வந்து விசாரணை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

4. **இப் பரீட்சைக்கு பழைய விண்ணப்பப் பத்திரங்களை உபயோகித்தல் கூடாது.**

எல்லா விண்ணப்பங்களும் பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு—2 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். (கலை, விஞ்ஞானம்) எல்லாப் பாடங்களுக்கும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 1974—01—15 ஆந் திகதியாகும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு—2,
1973—11—26,

12–80—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடக்கி அமுலுக்கு வந்தது**

## "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும்நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்டல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறேக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன்பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும்குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க **அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| நவெம்பர் | 02.11.73 | வெள்ளி | 24.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 09.11.73 | வெள்ளி | 31.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 07.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 14.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 21.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 07.12.73 | வெள்ளி | 28.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 05.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 12.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 19.12.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் டை.